களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.355 Multidisciplinary International
: https://doi.org/10.63300/kijts10sp02.2026

**Vol. 10 No. 02, September 2026 (Special Issue) p136-140** | Available online at: www.ngmtamil.in
*Original Research, Paper – Peer Reviewed*

# எழுத்தாளர் மௌனி படைப்புகளில் கதைப் பின்னனியின் தன்மைகள்

Characteristics of the Narrative Setting in the Works of Writer Mouni

**பெ.நித்தியா**
உதவி பேராசிரியர் தமிழ்த்துறை,எக்ஸல் வணிகவியல் மற்றும் அறிவியல் கல்லூரி
குமாரபாளையம் நாமக்கல்,அலைபேசி எண் – 6383437960
மின்னஞ்சல் முகவரி: tnnithi90@gmail.com

## Abstract

A literary work does not rest solely on the author's imagination; that imagination must be grounded in a specific background—or more accurately, such a background invariably exists. An event witnessed, heard, or experienced by the author typically serves as the catalyst for writing; this is what is termed the "background." These backgrounds are categorized into three types: a "social background" arises when a socially relevant event impacts the author and prompts them to write; a "temporal background" emerges when a past or contemporary event influences the author to create; and a "historical background" applies when the author is inspired to write by a historical event. This research paper examines the works of the writer Mouni through this framework, demonstrating that his creations are indeed grounded in these three types of backgrounds.

## ஆய்வுச் சுருக்கம்

ஆசிரியரிர் கற்பனையோடு மட்டுமே எந்தவொரு படைப்பிலும் கதை நின்றுவிடாது. அந்தக் கற்பனைக்கு ஏதேனும் ஒரு பின்னனி இருக்கவேண்டும். இருக்கவேண்டும் என்பதை விட இருக்கும் என்பதே பொருத்தமானதாகும். தான் கண்ட, கேட்ட, உணர்ந்த ஏதேனும் ஒரு நிகழ்வு ஆசிரியரை எழுதத்தூண்டியிருக்க வேண்டும். அதுவே பின்னனி என்கிறோம். இந்தப் பின்னனி மூன்று வகையாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஏதேனும் சமுதாயம் சார்ந்த நிகழ்வு ஆசிரியரைப் பாதித்து அதன் விளைவாக அவர் எழுதத் தொடங்கினால் அது சமுதாயப் பின்னனி என்றும், காலம் கடந்த நிகழ்வோ அல்லது சமகால நிகழ்வோ ஆசிரியரை பாதித்து அதன்மூலம் எழுதத் தொடங்கினால் அது காலப் பின்னனி என்றும், ஏதேனும் வரலாற்று நிகழ்வில் மனம் ஈடுபட்டு அதன் விளைவாக அவர் எழுதத் தொடங்கியிருந்தால் அது வரலாற்றுப் பின்னனி என்றும் அளவிடுவர். இதன் அடிப்படையில்

© 2014 The Author(s). This open access article is distributed under a Creative Commons Attribution (CC-BY) license 

ஆராய்ந்துப் பார்க்கும்போது எழுத்தாளர் மௌனி அவர்களும் தன்னுடைய படைப்பை இந்த மூன்று பின்னனியுடன்தான் படைத்துள்ளார் என்பதை ஆராய்ந்து விளக்குவதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

## ஆய்வு நோக்கம்

எழுத்தாளர் மௌனி அவர்களின் படைப்புகளில் காணப்படும் சமுதாயப் பின்னனி, வரலாற்றுப் பின்னனி, காலப்பின்னனி ஆகியவற்றை முறையாக ஆராய்ந்து விளக்குவதே இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

## ஆய்வு அனுகுமுறை

எழுத்தாளர் மௌனி அவர்களின் படைப்புகளில் உள்ள கதைக்கான பின்னனியை ஆராய்ந்து எடுத்துரைப்பதனால் இந்த ஆய்வுக்கட்டுரை எடுத்துக்கூறும் முறையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

## முன்னுரை

கதைப்பின்னணி என்பது ஒரு கதையின் நிகழ்வுகள் நடைபெறுவதற்கான காலம், இடம், சமூகச் சூழல், வரலாற்றுச் சூழல் மற்றும் கதாபாத்திரங்களின் வாழ்க்கைச் சூழல் ஆகியவற்றின் மொத்த அமைப்பாகும். ஒரு கதை “எங்கே? எப்போது? எந்தச் சூழலில்? எப்படிப்பட்ட சமூகத்தில்?” நடைபெறுகிறது என்பதை விளக்குவது கதைப்பின்னணி ஆகும். கதைா நிகழ்வுகள் நடைபெறும் சூழல் ஸ்ரீ கதைப்பின்னணி. இதன் அடிப்படையில் எழுத்தாளர் மௌனி அவர்களின் படைப்புகளுக்கான கதைப்பின்னனியை ஆராய்ந்து விளக்குவதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

## கதைப்பின்னணி

கதைப் பின்னணி என்பது கதை நடைபெறும் காலம், இடம் மற்றும் சூழ்நிலையைக் குறிக்கும். இது கதையின் மையக்கருத்தை நிலை நிறுத்தவும், கதாப்பாத்திரங்களின் செயல்பாடுகளை வழிநடத்தவும் மற்றும் படிப்பவர்களின் உணர்வுகளை ஈர்க்கவும் அடிப்படையாக அமையும் மிக முக்கியமான கட்டமைப்பாகும். காலம், இடம், சூழல் இவை மூன்றும் கதைப்பின்னணிக்கான முக்கியக் கூறுகள் ஆகும். இந்தக் கதைப் பின்னணி கீழ்க்கண்ட நான்கு வகைப்படும்.

## இடப் பின்னணி

எந்த இடத்தைச் சார்ந்து கதை நகர்கின்றது என்பது நேரடியாகத் தெரியும்படி கதை அமைப்பது நேரடிப் பின்னணி எனப்படும். இப்பின்னணி தெளிவாகத் தெரிந்தால் மட்டுமே கதையின் போக்கு நமக்கு விளங்கும். கிராமம், நகரம், அரண்மனை, காடு போன்ற வெளிப்படையான இடங்களை மையமாகக் கொண்டு கதை நகருவதை நேரடிப் பின்னணி என்று அழைப்பர். இதில் கதை நடைபெறும் இடம் மிகவும் வெளிப்படையாகத் தெரியபடுத்தப்பட்டிருக்கும். ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தினை மையமாகக் கொண்டு இயற்றப்படும் கதைகள் அனைத்தும் இந்த நேரடிக் கதைப்பின்னணியின் பாங்கிலேயே அமைந்திருக்கும்.

எழுத்தாளர் மௌனி அவர்களின் கதைகளிலும் இந்த நேரடிக் கதைப் பின்னணியைக் காண முடியும். "அழியாச்சுடர்" என்னும் கதையில் ஒரு வீட்டின் ஒரு அறைக்குள் கதை நடப்பதாக அவர் அக்கதையை அமைத்துள்ள பாங்கு இந்த நேரடிக் கதைப்பின்னணியை விளக்குவதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

***"நேற்றைய முன்தினம் இது நிகழ்ந்தது. மாலை நாலரை மணி சுமாருக்கு, நான் அவன் வீட்டை அடைந்தேன். அவன் என் பாலிய சினேகிதன். நான் சென்றபோது, தன் வீட்டின் முன் அறையில் அவன் வழக்கம்போல் ஒரு நாற்காலியில் அமர்ந்திருக்நதான். திறந்த ஜன்னலுக்கு எதிரே இட்காந்திருந்த அவன் ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருப்பதாக எண்ணி, திடீரென உட்புகச் சிறிது தயங்கி, ரேழியில் நின்றேன். என் பக்கம் பாராமலே, என்னை அவன் உள்ளே அழைத்தது திடுக்கிடத்தான் செய்தது. அவனுடைய அப்போதைய தோற்றமும் கொஞ்சம் ஆச்சரியம் அளிப்பதாகவே இருந்தது. உள்ளே ஒரே நாற்காலியும், அதன் அருகில் ஒரு மேஜையும் இருந்தன. மற்றும் எதிரில் வீதிப்பக்கம் பார்த்து ஜன்னல் திறந்து இருந்தது."***

***(மௌனி படைப்புகள் - க.நா.சுப்பிரமணியன் (தொ.ஆ) – ப- 84)***

**காலப் பின்னணி**

வரலாற்று நிகழ்வுகள், குறிப்பிட்ட சகாப்தம் அல்லது நவீன காலகட்ட நிகழ்வுகள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு படைக்கப்படுவது காலப் பின்னணி எனப்படும். இதில் கதைக்கு எந்த அளவு முக்கியத்துவம் தரப்படுகின்றதோ அந்த அளவு முக்கியத்துவம் அக்கதை பயணிக்கும் காலத்திற்கும் தரப்படும். இம்மாதிரியான பின்னணியைக் கொண்ட கதைகளில், அது பயணிக்கும் காலம் தெளிவாகத் தெரிந்தால் மட்டுமே கதையின் தன்மையை உணர்ந்துகொள்ள இயலும்.

மௌனி அவர்களின் படைப்பில் நவீன காலகட்டத்தின் நிகழ்வுகள் மட்டுமே இந்தக் காலப் பின்னணியை அழகூட்டும். ஏனெனில் நவீனம் மேல் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் மௌனி. எனவே யாரும் எதிர்பார்க்காத நவீனம் பல்வேறு இடங்களில் இவருடைய படைப்பில் புகுத்தப்பட்டிருக்கும். இவை அனைத்தும் கதையின் தன்மையைப் பன்மடங்கு உயர்த்திக் காட்டும். மேலும் படிப்போருக்குப் பல்வேறு கற்றல் அனுபவங்களைத் தருவதாகவும் இது அமையும்.

***"காதல் சாலை" என்ற கதையில் காதலில் உணர்வுகளைப் பதிவு செய்யும் இடத்தில் யாரும் அனுபவிக்காத நவீன கதைப்பின்னலை மிக அழகாகப் படைத்துக்காட்டுகிறார் ஆசிரியர். காதலியின் நினைவுகளோடு அவள் ஊரை விட்டு வெளியேறும் காதலன் தன் நினைவுகளை, "ஓடி ஓடி அவ்வூரை விட்டகன்றான். அவன் வழிநடந்தான். காதல்? எங்கே? எப்படி? என்றான். உணர்ந்தானா? அதோ அங்கே என்று ஆகாயத்தை இரு கைகளையும் விரித்து நீட்டிக் காட்டினான். விரல்களைக் கெட்டியாக மூடி அசைத்துப் பயமுறுத்தினான். பொழுது நன்றாக விடிந்துவிட்டது. அன்று பொழுது போயிற்று. இரவும் வந்தது. ஆனால் அவனுக்கு மறுபடியும் பொழுது புலரவில்லை.***

*நேருக்கு நேரே காதலைக் கண்டதேபோலும். கண்ட தன் கதிபோலும்...காண்பவரின் கதிபோலும்..."*

***(மௌனி படைப்புகள் - க.நா.சுப்பிரமணியன் (தொ.ஆ) – ப- 38)***

என்ற வரிகளில் கண்டுணர முடிகின்றது.

சமூகப் பின்னணி

மக்களுடைய பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், வாழ்க்கைமுறை மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றின் அடிப்படையில் கதையின் பின்னணியை அமைப்பதே சமூகப் பின்னணி ஆகும். ஒருவர் வாழும் நிலை அல்லது செயல்படும் சூழலின் சமூக, கலாச்சார மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பினை மையமாகக் கொண்டு எழுதப்படுவது இது.

கதை நடைபெறும் காலம், புவியியல் இடம், அங்குள்ள கலாச்சார சூழ்நிலைகள் ஆகியவற்றைத் துள்ளியமாக வெளிப்படுத்த இந்தச் சமூகப்பின்னணி உதவுகின்றது. படிப்பவர்களைக் கதையோடு ஒருங்கிணைப்பது இதுவே. மேலும், ஒரு தனி மனிதனின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றை வெளிச்சம்போட்டுக் காட்டுவதும் இதுவே. ஒரு மொழி அவன் சார்ந்த சமூகத்தில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை விளக்குவதும் இதுவே.

சமூகத்தில் நிகழும் ஏற்றத்தாழ்வுகள், மூட நம்பிக்கைகள், வர்க்கபோராட்டங்கள் முதலியவற்றை இச்சமூகப்பின்னணி மையமாகக் கொண்டுள்ளதால் இவற்றையெல்லாம் சமூகத்திற்கு வெளிப்படுத்திக் காட்டும் ஒரு காலக்கண்ணாடியாகவும் இது திகழ்கின்றது. இந்தச் சமூகப் பின்னணி மூலம் எழுத்தாளர்கள் சமூக அநீதிகளைச் சுட்டிக்காட்டுவதோடு மட்டும் நின்றுவிடவில்லை. தாங்கள் சுட்டிக்காட்டும் சமூக அநீதிகளுக்குத் தேவைப்படும் மாற்றங்களையும், சீர்திருத்தங்களையும் கூடவே விளக்கிக் கூறுகின்றனர். எனவே கதையில் கையாளப்படும் இந்தச் சமூகப் பின்னணியால் ஒரு மாபெரும் சமூக மாற்றமே நிகழ்வதற்கும் வாய்ப்புள்ளது என்பது கூர்ந்துநோக்கத்தக்கது.

மௌனி அவர்கள் தன் கதைகளில் பல இடங்களில் சமுதாய சிக்கல்களைப் பதிவுசெய்துள்ளார். அவர் கதைகளில் காணப்படும் சமுதாயப் பின்னணி மிகவும் விசித்திரமானதாக காணப்படும். பல நேரங்களில் அவர் முன்வைக்கின்ற பிரச்சனைகளும் அதற்கான தீர்வுகளும்கூட பலராலும் ஏற்றுக்கொள்ள இயலாததாகக்கூடக் காணப்படும்.

'அழியாச் சுடர்' என்ற சிறுகதை தன்னிலிருந்து புற உலகைப் பார்க்கின்ற ஒரு தனி மனிதனின் அகச்சிக்கலைப் பேசுகிறது. இச்சிறுகதை 27 வயது நிரம்பிய ஒருவன் தன் நண்பனுடன் நடத்தும் உரையாடலிலே நகர்த்தப்படுகிறது. அந்த உரையாடலில் வருகின்ற கடந்தகாலத்தையும் கோவிலையும் கதை களமாகக் கொண்டுள்ளது. கதையில் உவமைகளாகக் காட்சிப்படுத்தப்படுகின்ற வானை நோக்கி நிற்கும் பட்ட மரம் கதைமாந்தரின் வாழ்க்கையுடன் பொருத்திப்பார்க்கும்போது, சொல்லப்படாமல் விடப்பட்ட நிகழ்ச்சிகளை நிறைவு செய்வதாய் அமைந்திருக்கிறது. ஒரு தருணம் அல்லது நிகழ்வுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை விரிவுப்படுத்திக் கூறாமல் அந்தத் தருணத்திற்குப் பிறகான உணர்வுகளையும் மனவோட்டத்தையும் இந்தக் கதையில் பார்க்க முடிகிறது. மனவோட்டத்தின் வழி கதை சொல்கின்ற பாணியை மௌனியிடத்தில் காண முடிகிறது.

மக்களின் கலாச்சாரம், பழக்கவழக்கம், நம்பிக்கைகள் போன்றவற்றை சமூகப் பின்னணி என்ற தன் வித்தைமூலம் ஒரே நகர்வுகளில் காட்சிப்படுத்தும் ஆசிரியரின் கவியாழத்தை,

***"ஈசுவர சந்நிதியில் நின்று, தலைகுனிந்து அவள் மௌனமாகத் தியானத்தில் இருந்தாள். அவளுக்குப் பின் வெகு சமீபத்தில் நான் நின்றிருந்தேன். அவளுடைய கூப்பிய கரங்களின் இடைவழியாகக் கர்ப்பக்கிருக சரவிளக்குகள் மங்கி, வெகு தூரத்திற்கு அப்பாலே***

***பிரகாசிப்பதாகக் கண்டேன். அவள் கண்கள், விக்கிரகத்திற்குப்பின் சென்று வாழ்க்கையின் ஆரம்ப இறுதி எல்லைகளைத் தாண்டி இன்ப மயத்தைக் கண்டுகளித்தன போலும். எவ்வளவு நேரம் அப்படியோ தெரியாது. காலம் அவள் உருவில் அந்தச் சந்நிதியில் சமைத்து நின்றுவிட்டது.***

***தியானத்திலிருந்தும் விடுபட்டு என்பக்கம் அவள் திரும்பியபோது ஒரு பரவசம் கொண்டவனேபோல் என்னையும் அறியாமலே, 'உனக்காக நான் எது செய்யவும் காத்திருக்கிறேன். எதையும் செய்ய முடியும்.' என்றுசொல்லிவிட்டேன். இது அவள் காதில் விழுந்தன என்பது நிச்சயம். அவள் சிரித்தாள்."***

***(மௌனி படைப்புகள் - க.நா.சுப்பிரமணியன் (தொ.ஆ) – பக்- 86-87)***

என்ற வரிகளிலும் மேலும்,

***"அவளுக்கு மட்டுந்தான் நான் சொன்னது கேட்டது என்பதில் எனக்கு அப்பொழுதே சந்தேகம். உள்ளிருந்த விக்கிரகம், எதிர்த்தூணில் ஒன்றி நின்ற யாளி அவையும் கேட்டு நின்றன என்று எண்ணினேன். எதிரே லிங்கத்தைப் பார்த்தபோது, கீற்றுக்குமேலே, சந்தனப் பொட்டுடன் விபூதி அணிந்த அந்த விக்கிரகம் உருக்கொண்டு, புருவஞ்சுழித்துச் சினங்கொண்டது. தூணில் ஒன்றி நின்ற யாளியும் மிக மருண்டு, பயந்து கோபித்து முகம் சுளித்தது. பின் கால்களில் எழுந்து நின்று பயமூட்டியது. அவளைப் பார்த்தேன். அவள் மறுபக்கத் திரும்பியிருந்தாள். பின்னிய ஜடை பின் தொங்க மெதுவாகத் தன்னுடன் கூட வந்தவர்களுடன் சென்றாள். நான் அவளைச் சிறிது தொடர்ந்து நோக்கி நின்றேன். ஆழ்ந்து அமுங்கிய உலக நிசப்தத்தைக் குலைக்க, அவளுடைய சதங்கைகள் அணிந்த அடிச்சுவடு இன்றி முடியாதுபோலும். வந்தவர்களுடன் குதூகலமாகப் பேசி, வார்த்தைகளாடிக்கொண்டே கால் சதங்கைகள் கணீர் என்று ஒலிக்க போய்விட்டாள். சந்நிதியின் மௌனம் அவளால் உண்டான சப்தத்தின் எதிரொலியில் சிதைவுற்றது. வௌவால்கள் கீரிச்சிக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாகப் பறந்தன."***

***(மௌனி படைப்புகள் - க.நா.சுப்பிரமணியன் (தொ.ஆ) – ப- 87)***

என்ற வரிகளிலும் உவமைகளுடன் வெளிப்படுத்துகின்றார்.

இவ்வாறு தான் படைக்கும் படைப்பில் இடம் சார்ந்த பின்னணிகள், காலம் சார்ந்த பின்னணிக் குறிப்புகள், சமுதாயம் சார்ந்த பின்னணிக் குறிப்புகள் போன்றவற்றைத் திறம்பட புகுத்திக்காட்டுவதில் வல்லவர் எழுத்தாளர் மௌனி என்பது கூர்ந்து நோக்கத்தக்கது.

## ஆய்வுக்குத் துணை செய்த நூல்கள்

[1.] மௌனி படைப்புகள் - க.நா.சுப்பிரமணியன் (தொ.ஆ) – காலச்சுவடு பதிப்பகம் - சென்னை – முதல் பதிப்பு – 2009

[2.]தொல்காப்பியம் – பொருளதிகாரம்- இளம்பூரணர் (உரையாசிரியர்) - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - பதிப்பு ஆண்டு – 1956

[3.] முல்லை பி.எல்.முத்தையா(உ.ஆ), திருக்குறள், முல்லை பதிப்பகம், சென்னை-2003

[4.] புலியூர்க்கேசிகன்(உ.ஆ), தமிழ் இலக்கிய வரலாறு, சாரதா பதிப்பகம், சென்னை-2009.